**செய்தி வெளியீடு எண்: 062** **நாள்: 25.01.2019**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (25.1.2019) சென்னையில், அப்போலோ மருத்துவமனையால் துவக்கப்பட்டுள்ள** Apollo Proton Cancer Centre **திறப்பு விழாவில் ஆற்றிய உரை**

-----

**மாண்புமிகு அம்மா அவர்களை வணங்கி, அனைவருக்கும் வணக்கம்.**

**புதிதாக துவக்கப்பட்டுள்ள** Apollo Proton Cancer Centre-யை
**துவக்கி வைத்த**
மாண்புமிகு பாரத துணை குடியரசு தலைவர்
**திரு வெங்கையா நாயுடு அவர்களே !**

மாண்புமிகு தமிழ்நாடுஆளுநர்
**திரு பன்வாரிலால் புரோகித் அவர்களே!**

மாண்புமிகு துணை முதலமைச்சர்
**திரு ஓ. பன்னீர்செல்வம் அவர்களே !**

**நாடாளுமன்ற துணை சபாநாயகர் திரு. தம்பிதுரை அவர்களே !**

**மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே !**

அணுசக்தி ஒழுங்குமுறை வாரியத் தலைவர்
**திரு ஜி. நாகேஸ்வரராவ் அவர்களே !**

அப்போலோ மருத்துவமனைகள் குழுமத் தலைவர்
**டாக்டர் பிரதாப் சி ரெட்டி அவர்களே !**

அடையாறு புற்றுநோய் மருத்துவ நிலையத் தலைவர்
**டாக்டர் வி. சாந்தா அவர்களே !**

L & T நிறுவன நிர்வாக தலைமை செயல் அலுவலர் மற்றும் நிர்வாக இயக்குநர்
**திரு எஸ்.எம். சுப்பிரமண்யன் அவர்களே !**

IBA தலைமை செயல் அலுவலர்
**திரு ஆலிவர் லெக்ரெய்ன்** அவர்களே **!**

அப்போலோ மருத்துவமனைகள் குழும இயக்குநர்களே மற்றும் மருத்துவர்களே !

வணக்கத்திற்குரிய பெரியோர்களே! தாய்மார்களே!

பத்திரிக்கை மற்றும் ஊடகத் துறை நண்பர்களே!

உங்கள் அனைவருக்கும் முதற்கண்
எனது வணக்கத்தை  தெரிவித்துக் கொள்கிறேன்.

உயர்தர சுகாதார சேவைகளை வழங்குவது மட்டுமல்லாமல், மிகச் சிறந்த மனிதவளம் மற்றும் கட்டமைப்பை ஏற்படுத்துவதில், இந்தியாவிலேயே தமிழ்நாடு ஒரு முன்மாதிரி மாநிலமாக சிறந்து விளங்கி வருகிறது.  தாய்சேய் நலம் மற்றும் குடும்ப நலத் திட்டங்களை செயல்படுத்துவதிலும், நோய்களைத் தடுப்பதற்காகவும் பல முன்னோடித் திட்டங்களை மாண்புமிகு அம்மாவின் அரசு திறம்பட செயல்படுத்தி வருகிறது.

உலகத்தரம் வாய்ந்த சிகிச்சை அளிக்கும் வகையில், மருத்துவ கட்டமைப்பை வலுப்படுத்துதல், மருத்துவ மனித வளத்தை பெருக்குதல் போன்றவைகளில் மாண்புமிகு அம்மாவின் அரசு கூடுதல் கவனம் செலுத்தி வருகிறது.

இதன் காரணமாக இந்தியாவில் உயரிய மருத்துவ சேவை பெற வசதியுள்ள இடமாக தமிழ்நாடு கருதப்படுகிறது.

வளர்ந்த நாடுகள் அடைந்துள்ள சுகாதார குறியீடுகளை, 2023-ஆம் ஆண்டுக்குள் அடைய வேண்டும் என்ற இலக்கு, புரட்சித் தலைவி அம்மா அவர்களால் வெளியிடப்பட்ட "தொலைநோக்கு திட்டம் 2023"-இல் சேர்க்கப்பட்டுள்ளது.   தாய்மார்கள் இறப்பு விகிதம், குழந்தை இறப்பு விகிதம் போன்ற சுகாதார குறியீடுகளில் ஐக்கிய நாடுகளின் மில்லினியம் வளர்ச்சி இலக்குகளை ஏற்கனவே அடைந்த நிலையில், மற்ற மாநிலங்களுக்கு முன்னதாகவே தேசிய இலக்குகளையும் தமிழ்நாடு அடைந்துள்ளது.

பொருளாதார ரீதியாக பின்தங்கிய மக்களுக்கும்
தரமான மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட வேண்டும்.

அவர்களுக்கும் அனைத்து வசதிகளுடன்,
உலகத் தரம் வாய்ந்த மருத்துவ உதவிகள்
கிடைக்க வேண்டும் என்று மாண்புமிகு அம்மா
அவர்கள், முதலமைச்சரின் விரிவான மருத்துவ
காப்பீட்டுத் திட்டத்தை 2012ல் செயல்படுத்தினார்கள்.

தமிழ்நாடு முழுவதும் இத்திட்டம் சிறப்பான முறையில்
செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில்
இது வரை 27.73 இலட்சம் பயனாளிகள்
5,426.74 கோடி ரூபாய் காப்பீட்டுத் தொகையில்
சிகிச்சை பெற்றுள்ளனர். இதில்,
அரசு மருத்துவமனைகள் மட்டும் 1,969.14 கோடி ரூபாய்
காப்பீட்டுத் தொகையைப் பெற்றுள்ளன என்பதை
நான் இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

2018–ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் முதல்
நமது மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தில்,
ஒரு குடும்பத்திற்கு வழங்கப்படும் **காப்பீட்டுத் தொகை
2 லட்சம் ரூபாயிலிருந்து 5 லட்சம் ரூபாயாக
உயர்த்தப்பட்டுள்ளது.**

அரசு மருத்துவமனைகளின் உட்கட்டமைப்பு
வசதிகளை வலுப்படுத்துவதில் மாண்புமிகு அம்மாவின்
அரசு கவனம் செலுத்தி வருகிறது.
கடந்த 8 ஆண்டுகளில் 254 புதிய
ஆரம்ப சுகாதார நிலையங்கள்
221.30 கோடி ரூபாய் செலவில் நிறுவப்பட்டதோடு,
51 புதிய தாலுகா மருத்துவமனைகள்
ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இது மட்டுமின்றி, 165 ஆரம்ப சுகாதார நிலையங்கள்
190.37 கோடி ரூபாய் செலவில் 30 படுக்கை வசதி,
ஸ்கேன் வசதி, அறுவை சிகிச்சை வசதி
போன்ற வசதிகளுடன் மேம்படுத்தப்பட்டுள்ளன.

மனித வளத்தை பெருக்குவதிலும்
மாண்புமிகு அம்மாவின் அரசு மிகுந்த அக்கறை

கொண்டு செயல்பட்டதினால் கடந்த 8 ஆண்டுகளில்
5 புதிய மருத்துவக் கல்லூரிகளை தொடங்கியும்,
ஏற்கனவே செயல்படும் அரசு மருத்துவக்
கல்லூரிகளில் மருத்துவப் படிப்பு இடங்களை
அதிகரித்தும், 1,000 எம்.பி.பி.எஸ்.
இடங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

இது தவிர, 606 முதுநிலை மருத்துவப் பட்டப்படிப்பு
இடங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

உடலுறுப்பு மாற்று அறுவை சிகிச்சை திட்டத்தை
செயல்படுத்துவதில் தமிழ்நாடு எப்பொழுதுமே
மற்ற மாநிலங்களுக்கு முன்னுதாரணமாக
திகழ்ந்து வருகிறது. கடந்த 4 வருடங்களாக
தமிழ்நாடு தேசிய அளவில் மிகச் சிறப்பாக செயல்படும்
மாநிலம் என்ற விருதினை பெற்று வருகிறது.

சமீபத்தில், சென்னை அரசு ஸ்டான்லி
மருத்துவமனையில் இரண்டு கைகளையும் இழந்த
ஒருவருக்கு, கைகள் மாற்று அறுவை சிகிச்சை செய்யப்பட்டது.
இந்தியாவிலேயே
அரசு மருத்துவமனையில் உறுப்பு மாற்று
அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளது என்பது
ஒரு சாதனையாகும்.

புற்றுநோய்க்கு சிகிச்சை அளிக்கும் பொருட்டு,
மாண்புமிகு அம்மாவின் அரசு,
அரசு மருத்துவமனைகளை வலுப்படுத்தி வருகிறது.
புற்று நோய் உட்பட தொற்றா நோய்களுக்கு
சிகிச்சை அளிப்பதில் தமிழ்நாடு இந்தியாவிலேயே
முன்னோடி மாநிலமாக திகழ்கிறது.

முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத்
திட்டத்தில் புற்றுநோய்களுக்கான சிகிச்சை அளிக்க
காப்பீட்டுத் தொகை வழங்கப்படுகிறது.
மாநில அளவில் புற்று நோய் பாதிப்புள்ளவர்களை
பதிவு செய்வதற்கு, மாநில அரசுடன்
இணைந்து செயல்பட, அடையாறு புற்றுநோய்
சிகிச்சை மையம் தலைமை மையமாக
அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

காஞ்சிபுரம் அரசு அண்ணா புற்றுநோய்
சிகிச்சை மையம் ஏற்கனவே மண்டல
புற்றுநோய் சிகிச்சை மையமாக இயங்கி வருகிறது.
இத்துடன் மதுரை, கோயம்புத்தூர், தஞ்சாவூர் மற்றும்
திருநெல்வேலி ஆகிய இடங்களில் உள்ள
அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில்
**60** கோடி ரூபாய் செலவில் **4 மண்டல புற்றுநோய்**
**சிகிச்சை மையங்கள்** அமைக்கப்பட்டுள்ளன.

தேசிய புற்றுநோய் கட்டுப்பாடு திட்டத்தின் கீழ்
அரசு மருத்துவக் கல்லூரிகளில் புற்றுநோய் சிகிச்சை
பிரிவுகள் வலுப்படுத்தப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

புற்றுநோய் அறிகுறிகளைக் கண்டறிந்து
சிகிச்சை அளிப்பதற்காக 165 கோடி ரூபாய்
செலவில் லீனியர் ஆக்ஸிலரேட்டர்களும்,
79 கோடி ரூபாய் செலவில் கோபால்ட்
கதிர்வீச்சு சிகிச்சை கருவிகள் போன்ற
நவீன மருத்துவக் கருவிகள் அரசு மருத்துவக்
கல்லூரிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

இதன் மூலம் ஏழை மக்களுக்கு தரமான,
உயரிய சிகிச்சை அரசு மருத்துவமனைகளில்
அளிக்கப்படுகின்றது.

முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத்
திட்டத்தில் இணைந்து செயல்படும்
710 தனியார் மருத்துவமனைகளில்
அப்போலோ மருத்துவமனையும் இணைந்து
மருத்துவ சேவை ஆற்றி வருகிறது.

இந்தியாவில் பிற மாநிலங்களில் மட்டுமல்லாமல்,
உலகின் பல நாடுகளிலிருந்தும் நோயாளிகள்
தமிழ்நாட்டிற்கு சிகிச்சை பெறுவதற்காக வருகின்றனர்.
இதனால், தமிழ்நாடு மருத்துவ சுற்றுலாவின்
தலைமையிடமாக விளங்குவது மட்டுமன்றி, நமது
நாட்டிற்கு அந்நிய செலாவணியையும் ஈட்டித்தருகிறது.

மரியாதைக்குரிய டாக்டர் பிரதாப் ரெட்டி அவர்கள், 1983ம் ஆண்டு அப்போலோ மருத்துவமனையை, இந்தியாவின் முதல் கார்ப்பரேட்

மருத்துவமனையாக சென்னையில் துவங்கினார்கள். தற்போது இந்தியா முழுவதும் முக்கியமான நகரங்களில் அப்போலோ மருத்துவ மனைகள் செயல்பட்டு வருகின்றன. மேலும் அப்போலோ மருந்தகங்கள், அப்போலோ பரிசோதனை நிலையங்கள், அப்போலோ டெலிமெடிசன் நிலையங்கள் என்று அப்போலோ மருத்துவ நிறுவனம், பல்வேறு மருத்துவ சேவைகளை ஆற்றி வருகிறது.

இந்நிறுவனத்தின் தலைவர் மரியாதைக்குரிய டாக்டர் பிரதாப் ரெட்டி அவர்களின் மருத்துவ சேவையை பாராட்டி, இந்தியாவின் உயரிய விருதான பத்ம விபூஷன் விருதை இந்திய அரசு அவருக்கு 2010ம் ஆண்டு வழங்கியுள்ளது.

உலகளவில், புற்றுநோய் சிகிச்சைக்கான
மேம்படுத்தப்பட்ட சிகிச்சை முறைகள்
பல நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

அதில் ஒன்றுதான் Proton Therapy முறை.

ஏற்கெனவே 1983 முதல் சென்னையில் புற்றுநோய்
மருத்துவமனையை சிறப்பாக நடத்திவரும்
அனுபவம் மிக்க நிறுவனமான அப்போலோ
மருத்துவமனை நிறுவனம்

Apollo Proton Cancer Centre என்ற
இந்த மையத்தினை அமைத்ததற்கு
எனது பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.
இம்மையம் இன்று மாண்புமிகு குடியரசு
துணைத் தலைவர் அவர்களால் துவக்கி
வைக்கப்பட்டுள்ளது மிகவும் மகிழ்ச்சி அளிக்கிறது.

இம்மாதிரி மையம் தெற்காசியாவிலேயே
முதன் முதலாக சென்னையிலேயே துவக்கப்படுகிறது
என்பதை அறிவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்த முறை பயன்படுத்துவதன் மூலம் ஏற்படும்
பலன்கள் சிலவற்றை இங்கே குறிப்பிட்டுச்
சொல்ல விரும்புகிறேன்.

- புற்றுநோய் கட்டிகள் மீது குறைந்த அளவு கதிர்வீச்சு முதல் கதிர்வீச்சில்லா சிகிச்சை அளிக்கப்படும்;
- ஒவ்வொரு சிகிச்சைக்கும் குறைந்த கதிர்வீச்சே பயன்படுத்தப்படும்;
- குறைந்த அளவு பக்கவிளைவுகளே ஏற்படும்;
- சிகிச்சையின் போதும், சிகிச்சைக்குப் பிறகும் நல்ல ஆரோக்கியமான வாழ்க்கையை வாழலாம்;
- இந்த சிகிச்சை நோயாளிகளுக்கு வலி ஏற்படாவண்ணம் அளிக்கப்படுகிறது.

**“சமூக பொருளாதார பின்னணி எதுவாக இருந்தாலும், அதனை கருத்தில் கொள்ளாமல், மாநிலத்திலுள்ள அனைத்து மக்களுக்கும் மருத்துவ சிகிச்சை தொடர்பான அனைத்து நடைமுறைகள், தொழில் நுட்பங்கள், மருத்துவத் திறன் செயல்பாடுகள் ஆகியவற்றை கிடைக்கச் செய்வதே எனது நோக்கமாகும்”**

என்றார் **மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.**

பொருளாதார வசதி உள்ளவர்கள்
எந்த மருத்துவமனையிலும், சென்று சிகிச்சை
பெற்றுக் கொள்ள முடியும். ஆனால் பொருளாதார
ரீதியில் பின்தங்கியுள்ள ஏழை மக்களுக்கும்,
தரமான சிகிச்சை கிடைக்க வேண்டும்
என்பதே மாண்புமிகு அம்மா மற்றும் மாண்புமிகு
அம்மா அரசின் நோக்கமாகும்.

எனவே, ஏழை எளிய மக்களுக்கு உயரிய சிகிச்சைகள்
தேவைப்பட்டு, அவர்கள் தனியார்
மருத்துவமனைகளை அணுக வேண்டிய சூழ்நிலையில்,
அவர்களுக்கு தகுந்த சிகிச்சை அளித்து அவர்களின்
உயிரைக் காப்பாற்ற வேண்டும் என்பதை
இத்தருணத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன்.

அந்த வகையில், அப்போலோ மருத்துவமனை
புற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ள நோயாளிகளுக்கு
சிறப்பான நவீன மருத்துவ சிகிச்சையை வழங்கி
பலருடைய வாழ்க்கையிலும் ஒளியேற்றி வருகிறது.
இம் மருத்துவ மனையின் பணி தொடர
எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி! வணக்கம்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**